www.shaivism.org

தலம் கச்சி ஏகம்பம்
பண் தக்கேசி
ஏழாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஆலந் தான் உகந் தமுதுசெய் தானை
   ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
   சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள் உமை நங்கை
   என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
   காணக் கண் அடி யேன்பெற்ற வாறே

உற்ற வர்க்குத வும்பெரு மானை
   ஊர்வ தொன்றுடை யான் உம்பர் கோனைப்
பற் றி னார்க்கென்றும் பற்றவன் றன்னைப்
   பாவிப் பார்மனம் பாவிக்கொண் டானை
அற்ற மில்புக ழாள் உமை நங்கை

ஆதரித்து வழிபடப் பெற்ற
கற்றை வார்சடைக் கம்பனெம் மானைக்
காணக் கண் அடி யேன்பெற்ற வாறே

திரியும் முப்புரம் தீப்பிழும் பாகச்
செங்கண் மால்விடை மேற் றிகழ் வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந் தானைக்
காம னைக்கன லாவிழித் தானை
வரிகொள் வெள்வளை யாள் உமை நங்கை
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை எங்கள்பி ரானைக்
காணக் கண் அடி யேன்பெற்ற வாறே

குண்ட லந்திகழ் காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழி லானை
வண்ட லம்புமலர்க் கொன்றையி னானை
வாள ராமதி சேர்சடை யானைக்
கெண்டை யந்தடங் கண்ணுமை நங்கை
கெழுமி ஏத்தி வழிபடப் பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண் அடி யேன்பெற்ற வாறே

வெல்லும் வெண்மழு ஒன்றுடை யானை
வேலை நஞ்சுண்ட வித்தகன் றன்னை
அல்லல் தீர்த்தருள் செய்யவல் லானை
அரும றையவை அங்கம்வல் லானை

எல்லை யில்புக ழாள் உமை நங்கை
   என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள்பி ரானைக்
   காணக் கண் அடி யேன்பெற்ற வாறே

திங்கள் தங்கிய சடையுடை யானைத்
   தேவ தேவனைச் செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடை யானைச்
   சாம வேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
   மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பனெம் மானைக்
   காணக் கண் அடி யேன்பெற்ற வாறே

விண்ண வர்தொழு தேத்தநின் றானை
   வேதந் தான்விரித் தோதவல் லானை
நண்ணி னார்க்கென்றும் நல்லவன் றன்னை
   நாளும் நாம் உகக் கின்றபி ரானை
எண்ணில் தொல்புக ழாள் உமை நங்கை
   என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றுடைக் கம்பனெம் மானைக்
   காணக் கண் அடி யேன்பெற்ற வாறே

சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள்
   சிந்தை யில்திக ழுஞ்சிவன் றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்

பாலொ டானஞ்சும் ஆட்டுகந் தானை
அந்த மில்புக ழாள் உமை நங்கை
ஆத ரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பன் எம் மானைக்
காணக் கண் அடி யேன்பெற்ற வாறே

வரங்கள் பெற்றுழல் வாளரக் கர்தம்
வாலி யபுரம் மூன்றெரித் தானை
நிரம்பிய தக்கன் றன்பெரு வேள்வி
நிரந்த ரஞ்செய்த நிட்கண் டகனைப்
பரந்த தொல்புக ழாள் உமை நங்கை
பரவி ஏத்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன் எம் மானைக்
காணக் கண் அடி யேன்பெற்ற வாறே

எள்கல் இன்றி இமையவர் கோனை
ஈச னைவழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடி யேன்பெற்ற வாறே

பெற்றம் ஏறுகந் தேறவல் லானைப்
பெரிய எம்பெரு மான் என்றெப் போதும்

கற்ற வர்பர வப்படு வானைக்
   காணக் கண் அடி யேன்பெற்ற தென்று
கொற்ற வன்கம்பன் கூத்தன் எம் மானைக்
   குளிர்பொ ழில்திரு நாவலா ரூரன்
நற்றமிழ் இவைஈ ரைந்தும் வல்லார்
   நன்னெ றிஉல கெய்துவர் தாமே

திருச்சிற்றம்பலம்

www.shaivism.org